மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கோயம்புத்தூர் மாவட்ட கனிம
அறக்கட்டளை, புவியியல் மற்றும்
சுரங்கத்துறை அலுவலகம்,
கோயம்புத்தூர்.

ந.க.471/கனிமம் /2016

நாள் : 14.08.2019.

**கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு கூட்ட நடவடிக்கைகள்.**

கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் ஐந்தாவது நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு கூட்டம் 14.08.2019 பிற்பகல் 5.00 மணியளவில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர், கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் மேலாண்மைக் குழு மற்றும் நிர்வாகக் குழு தலைவர், அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

| வ. எண் | நிர்வாக குழு | வ. எண் | மேலாண்மை குழு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர் | 1. | மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர் |
| 2. | இணை இயக்குநர் / உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை , கோயம்புத்தூர் | 2. | இணை இயக்குநர் / உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை , கோயம்புத்தூர் |
| 3. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர் | 3. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர் |
| 4. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், கோயம்புத்தூர் | 4. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், ஊராட்சிகள் வளர்ச்சி, கோயம்புத்தூர் |
| 5. | முதன்மை கல்வி அலுவலர், கோயம்புத்தூர் | 5. | துணை இயக்குநர்/ உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சி துறை, கோயம்புத்தூர் |
| 6. | மாவட்ட கரூவூல அலுவலர், கோயம்புத்தூர் | 6. | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கோயம்புத்தூர். |
| 7 | மாவட்ட சமூக நல அலுவலர், கோயம்புத்தூர் | 7. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், கோவை வடக்கு |
| 8 | உதவி இயக்குநர், ஊராட்சிகள், கோயம்புத்தூர் | 8. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், கோவை தெற்கு |
| 9 | திரு எஸ்.நரசிம்ஹன், ஓய்வு பெற்ற துணை ஆட்சியர், எண்.6, ருக்கம்மாள் காலனி, துடியலூர், கோயம்புத்தூர். | 9 | மாவட்ட வன அலுவலர், கோயம்புத்தூர் |

| | | | |
|---|---|---|---|
| | | 10 | உதவி இயக்குநர், நில அளவை பதிவேடுகள் துறை, கோயம்புத்தூர். |
| | | 11 | மாவட்ட கரூவூல அலுவலர், கோயம்புத்தூர் |
| | | 12 | மாவட்ட சமூக நல அலுவலர், கோயம்புத்தூர் |
| | | 13 | துணை இயக்குநர், (பொது சுகாதார மைய பொறுப்பாளர்), சுகாதார பணிகள், கோயம்புத்தூர் |
| | | 14 | இணை இயக்குநர், வேளாண்மைத்துறை, கோயம்புத்தூர் |
| | | 15 | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர், கோயம்புத்தூர். |

**கூட்டத்தில் கீழ்க்கண்ட விவரங்கள் விவாதித்து முடிவுகள் எடுக்கப்பட்டது:**

1) குவாரி குத்தகை உரிமைதாரர்களிடமிருந்து பெறப்படும் மேற்படி தொகையை சம்பந்தப்பட்ட குவாரிகளால் பாதிக்கப்பட்ட வருவாய் கிராமங்களின் வளர்ச்சி மற்றும் அப்பகுதி மக்களின் மேம்பாட்டு திட்டத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என கனிம அறக்கட்டளை அரசாணை (எம்.எஸ்) எண்.57, தொழிற்துறை (எம்.எம்.டி.1), நாள்:19.5.2017-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் மூலம் 31.07.2019 வரையிலான காலத்தில் பெறப்பட்ட நிதியின் தற்போதைய நிலை கீழ்கண்டவாறு.

**Fund Status as on 31.07.2019.**

| Sl. No | Particulars | Amount |
|---|---|---|
| 1 | DMFT Fund Collections upto July 2019. | 14,92,20,441 |
| | Expenses incurred upto July 2019 | 13,45,939 |
| | **Balance** | **14,78,74,502** |
| | | |
| | Less: Expected Expenditure (Aug 2019 to Mar 2020) | |
| | Auditor Sitting Fee | 23,600 |
| | Salary for Data Entry Operator from Aug 2019 (8 Months) | 80,000 |
| | Salary for Accountant from Aug 2019 (8 Months) | 96,000 |
| | Administrative Sanction issued for 11 Projects | 10,34,76,000 |
| | **Total** | **10,36,75,600** |

| | | |
|---|---|---|
| | | |
| | **Balance Available** | **4,41,98,902** |
| | | |
| | Expected DMFT fund (Aug19 to Mar 20) (Rs.30 lakhs X 8 Months) | 2,40,00,000 |
| | **Total Fund Availability during the year 2019 – 2020** | **6,81,98,902** |

3) கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் மூலம் தற்போது வரை 14 திட்டங்களுக்கு ரூபாய்.11,69,66,000/- க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூபாய்.50,00,000/- மதிப்பில் 6 திட்டங்கள சென்னை புவியியல் மற்றும் சுரங்கத்தறை இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்காகவும், ரூபாய்.4,42,00,000/- மதிப்பிலான 31 திட்டங்களுக்கு புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் வழியாக அரசின் ஒப்புதலுக்காகவும் அனுப்பப்பட்டு நாளது தேதிவரை நிலுவையில் உள்ளது. நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட 14 திட்டங்களில் 7 திட்டங்கள் மட்டும் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

4) கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் நான்காவது நிர்வாக குழு மற்றும் மேலான்மை குழுவில் ரூபாய்.11,20,00,000/- மதிப்பில் 4 திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. மேற்கண்ட நான்கு திட்டங்களில் மதுக்கரை வட்டத்திற்குட்பட்ட வழுக்கல் கிராமத்தில் குமிட்டிப்பதி ஆற்றின் இடையில் அமைந்திருக்கும் தடுப்பணையை புதுப்பிக்க ரூபாய்.1,25,00,000/- மதிப்பிலான ஒரு திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டிருந்த நிலையில், மேற்படி தடுப்பணை 100 வருடங்கள் பழமையானது எனவும், புதிய தடுப்பணை கட்ட முன்மொழிவுகள் அனுப்பும் பொருட்டு, நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட மேற்காண் திட்டத்தினை ரத்து செய்திடுமாறு ஈரோடு, பவானி உப கோட்டம், நீர்வள ஆதார அமைப்பின் தலைமை செயற்பொறியாளரின் கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் ஐந்தாவது நிர்வாக குழு மற்றும் மேலான்மை குழு கூட்டத்தில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட ரூபாய்.1,25,00,000/- மதிப்பில் தடுப்பணை புதுப்பிக்கும் திட்டத்தை ரத்து செய்ய மேற்காண் குழு உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

5) கோயம்புத்தூர் மாவட்டத்தில் குவாரிகள் மற்றும் சுரங்கங்களினால் நேரியடியாக பாதிக்கப்பட்டபகுதிகளாக 76 கிராமங்களும், மறைமுகமாக பாதிக்கப்பட்ட பகுதிகளாக 1 கிராமமும் கண்டறியப்பட்டு கனிம அறக்கட்டளையின் நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தற்போது, கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட 77 கிராமங்கள் தவிர 218 கிராமங்கள் குவாரிகள் மற்றும் சுரங்கங்களினால் மறைமுகமாக

பாதிக்கப்பட்ட கிராமங்களாக இக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. குவாரிகளினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட 295 கிராமங்களின் வபரம் கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

6) தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள்,2017 ன் விதி 16 ன் உள்விதி (4) (5) மற்றும் (6) ன் படி ஒரு நிதி ஆண்டில் திட்ட மதிப்பீடு ரூ.50 இலட்சம் வரை மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மேலாண்மை குழுவினால் ஒப்புதல் பெற்று செயல்படுத்தாலம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2019-2020 ஆம் நிதியாண்டில் கோயம்பத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள பெருங்கனிமம் மற்றும் சிறுகனிம சுரங்கங்களினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் சுரங்கங்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மேம்பாட்டுப் பணிகளுக்காக கோயம்புத்தூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், மருத்துவம் மற்றும் சுகாதாரப்பணிகள் இணை இயக்குநர், கோவை மாவட்ட மருத்துவ கல்லூரி தலைவர் ஆகியோரிடமிருந்து கீழ்கண்ட 4 திட்ட பணிகளுக்காக முன்மொழிவுகள் பெறப்பட்டு நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு உறுப்பினர்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

| Sl. No | Implementing Agency | Particulars | Amount (in Rs.) |
|---|---|---|---|
| 1 | Chief Educational Officer, Coimbatore | Providing the Hindu Weekender Tabloid to Government (Middle, High and Secondary)Schools and Providing the Hindu Young World Tabloid to Government (Primary, Middle, High and Secondary) Schools. | **10,13,220** |
| 2 | Joint Director, Health and Rural Medical Services, Coimbatore | Providing Cell Counter for Madukkarai Government Hospital | 2,96,180 |
| | | Providing Cell counter for Kinathukadavu Government hospital | 2,96,180 |
| | | Providing video Endoscopy(ENT) for Periyanaikenpalayam Government hospital | 8,07,500 |
| | | Providing USG Instrument for Sulur and Annur Government hospital | 11,00,000 |
| | | Providing video Defibrillator Instrument for Periyanaikenpalayam and Thondamuthur Government hospital | 4,25,600 |

| | | | |
|---|---|---|---|
| | | Providing CTG instrument for Thondamuthur and Valparai Government hospital | 2,20,000 |
| | | **Total** | **31,45,460** |
| 3 | Joint Director, Health and Rural Medical Services, Coimbatore | Providing Medical Equipment for Blood Bank at Pollachi Government Hospital. | **7,92,973** |
| 4 | Dean, Coimbatore Medical College and Hospital, Coimbatore. | Providing Medical Equipment (Oxygen O2 Concentrator 3 Liter) | **30,000** |
| | | **Total** | **49,81,653** |

மேற்கண்ட ரூ.49,81,653 மதிப்பிலான நான்கு திட்டங்களுக்கு நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு நிர்வாக ஒப்புதல் வழங்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

மேற்காணும் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைப் பெற்று பணி முறைப்படி செயல்படுவதை கண்காணித்து கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளைக்கு அறிக்கை அனுப்ப சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு (Implementing Agencies) அறிவுரை வழங்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பணிகளை செயல்படுத்துவது தொடர்பான மாதாந்திர நிலை அறிக்கையையும் (Monthly Status Report) புகைப்படம் மற்றும் உரிய பட்டியல்கள்/பணம் வழங்கிய வவுச்சர்கள் மற்றும் இரசீதுகளுடன் செலவின அறிக்கையை (Expenditure Statement) அனுப்பிட பணிகளை செயல்படுத்தும் நிறுவனத்திற்கு (Implementing Agencies) அறிவுறுத்தப்பட்டது.

7) கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் 2018-2019 ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு உறுப்பினர்களின் பார்வைக்காக சமர்ப்பிக்கப்பட்டு குழு உறுப்பினர்களால் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் 2019-2020 ம் ஆண்டிற்கான திட்ட அறிக்கை மற்றும் பட்ஜெட் ஆகியவவை தயார் செய்ய வேண்டியுள்ளதால் சம்மந்தப்பட்ட துறைகளிடமிருந்து 2019-2020 ம் ஆண்டில் கனிம அறக்கட்டளை

நிதியின் மூலம் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான விவரங்கள் பட்டியலாக கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட விவரங்கள் பெறப்பட்டவுடன் 2019-2020 ம் ஆண்டிற்கான திட்ட அறிக்கை மற்றும் பட்ஜெட் ஆகியவை தயார் செய்யப்பட்டு அடுத்து வரும் குழு கூட்டத்தில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

8) கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் 2018-2019 ம் நிதியாண்டின் வரவு செலவினங்கள் தி/வா.ஜெயகுமார் அசோசியேட்ஸ் நிறுவனத்தினரால் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கை அறிக்கை நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு உறுப்பினர்களின் பார்வைக்காக சமர்ப்பிக்கப்பட்டு குழு உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9) அரசாணை எண்.112 தொழில் (எம்.எம்.டி.1) துறை நாள்.30.05.2019 ன் படி, மாநில மற்றும் மண்டல அளவில் கனிம அறக்கட்டளையின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், துறை மேம்பாட்டிற்காகவும் கனிம அறக்கட்டளையின் மூலம் பெறப்படும் நிதியிலிருந்து 1 சதவீத தொகையை, சென்னை புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரகத்தில் தொடங்கப்பட்டுள்ள கனிம அறக்கட்டளை வங்கி கணக்கில் பிரதி மாதம் 10 ம் தேதிக்குள் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி 30.05.2019, 31.05.2019 மற்றும் ஜீன் 2019 மாதத்திற்கான 1 சதவீத தொகையாக ரூ.36,629/- இயக்குநரக கனிம அறக்கட்டளை வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுவிட்டது. இந்நேர்வில், மேற்கண்ட 1 சதவித தொகையை இயக்குநரக கணக்கில் செலுத்த நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு உறுப்பினர்களால் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10) கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் அன்றாட பணிகளை மேற்கொள்ள ஒரு கணினி தரவு பதிவர் மற்றும் ஒரு கணக்கர் ஆகியோரை அவுட்சோர்சிங் முறையில் நியமனம் செய்யும்பொருட்டு, விலை புள்ளியலின் அடிப்படையில் தி/வா.கிராம விகாஸ் டிரஸ்ட் என்ற நிறுவனத்தினரை 25.09.2018 முதல் 24.08.2019 வரை நியமனம் செய்யப்பட்டிருந்தது.

மேற்கண்ட காலங்களில் தி/வா. கிராம விகாஸ் டிரஸ்ட் நிறுவனத்தினர் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ள கணினி தரவு பதிவர் மற்றும் கணக்காளர் ஆகியோரை கொண்டு கனிம அறக்கட்டளையின் நிர்வாக பணிகள் எவ்வித சுணக்கமின்றி செயல்படுவதாலும், இனி வரும் காலங்களில் மேற்படி நிர்வாக பணிகளை செயல்படுத்த வேண்டியுள்ளதாலும் தி/வா. கிராம விகாஸ் டிரஸ்ட் நிறுவனத்தினரையே மேற்கண்ட அனுமதி நிறைவுபெறும் நாளிலிருந்து ஒரு நாள்

இடைவெளி விட்டு மேலும் பதினோரு மாத காலத்திற்கு நியமிக்க நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு உறுப்பினர்களால் ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டது.

11) அரசாணை எண்.57 தொழில் (எம்.எம்.டி1) துறை நாள்.19.05.2017 மற்றும் அரசாணை எண்.112 தொழில் (எம்.எம்.டி1) துறை நாள்.30.05.2019 ன் படி கனிம அறக்கட்டளையின் மூலம் பெற்பபடும் நிதியிலிருந்து 6 சதவீத தொகை (5 சதவித தொகை மாவட்ட கனிம அறக்கட்டளை நிர்வாக பணிக்கும் + 1 சதவீத தொகை இயக்குநரக கனிம அறக்கடடணை நிதி கணக்கிற்கும்) செலவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையில் அன்றாட அலுவலக பணிகளை மேற்கொள்ள கீழ்கண்ட உபகரணங்களை கொள்முதல் செய்ய நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு உறுப்பினர்களால் ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டது.

| **Sl. No** | **Particulars** | **Qty (Nos)** |
|---|---|---|
| 1. | Photo Copier Machine (Xerox) | 1 |
| 2. | Scanner | 1 |
| 3. | Desktop Computer | 1 |
| 4. | Laptop | 1 |

12) கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியிலிருந்து ஜனவரி 2019 முதல் ஜீலை 2019 வரை கீழ்கண்ட செலவினங்களுக்காக காசோலை வழங்கப்பட்டது.

| வ.எண். | விவரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | 2018-2019 ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் | 11,800/- |
| 2. | கணினி தரவு பதிவர் மற்றும் கணக்காளருக்கான பணிச்சம்பளம் | 96,000/- |
| 3. | இயக்குநரகத்தில் உருவாக்கப்பட்டுள்ள கனிம அறக்கட்டளை கணக்கில் செலுத்தப்படும் 1 சதவீத தொகை | 36,629/- |
| | **மொத்தம்** | **1,44,429/-** |

மேற்கண்ட செலவினங்கள், கனிம அறக்கட்டளையின் நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு உறுப்பினர்களால் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட முடிவுகளை அறக்கட்டளையின் மேலாண்மைக் குழு மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

| வ. எண் | நிர்வாக குழு / மேலாண்மை குழு | கையொப்பம் |
|---|---|---|
| 1) | தலைவர்<br>மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர். | ஓம்.xxx<br>நாள்: 14.08.2019 |
| 2) | <u>உப தலைவர்:</u><br>மாவட்ட வருவாய் அலுவலர்,<br>கோயம்புத்தூர் | |
| 3) | <u>கூட்டுநர்:</u><br>துணை இயக்குநர் / உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை ,<br>கோயம்புத்தூர் | |
| 4) | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர். | |
| 5) | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் கோவை வடக்கு | |
| 6) | மாவட்ட ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,<br>கோயம்புத்தூர் | |
| 7) | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)<br>கோயம்புத்தூர். | |
| 8) | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>கோயம்புத்தூர். | |
| 9) | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் | |
| 10) | முதன்மை கல்வி அலுவலர்,<br>கோயம்புத்தூர். | |
| 11) | உதவி இயக்குநர் நில அளவை பதிவேடுகள் துறை, கோயம்புத்தூர் | |
| 12) | மாவட்ட கருவூல அலுவலர். | |
| 13) | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),<br>கோயம்புத்தூர். | |
| 14) | திரு.எஸ்.நரசிம்ஹன், ஓய்வு பெற்ற துணை ஆட்சியர், எண்.6, ருக்கம்மாள் காலனி, துடியலூர். கோயம்புத்தூர். | |
| 15) | இணை இயக்குநர், வேளாண்மை துறை, கோயம்புத்தூர். | |

//உண்மை நகல் / உத்திரவுபடி//

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை,
கோயம்புத்தூர்.